Registered as a news paper. பக்கங்கள்: எட்டு

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

வி...
உள்நா...
எந்...

மற்...
ஐரோப்பிய...
20 % விசே...
259, கே.கே.எஸ்...
யாழ்ப்பாண...
(Opposite All Ceylon ...
Tel - 021 222...
Fax - 021 222...
46, ஆடியபாதம் வீதி...
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
Tel - 021 222 756...
Fax - 021 222 731...

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 வைகாசி 21 ஹிஜ்ரி 1427 ஜ அவ்வல் 09 (06.06.2006) செவ்வாய்...

## படையினரின் சோதனையால் ஓட்டோவில் பிரசவித்த பெண்!

யாழ்ப்பாணம்—

சாவகச்சேரி - மீசாலையில் படையினரின் தீவிரசோதனை நடவடிக்கையால்சாவகச்சேரி வைத்தியசாலைக்கு பிரசவத்துக்குச் சென்ற பெண் ஓட்டோவிலேயே குழந்தையைப் பிரசவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

தென்மராட்சி - மீசாலை பிரதேசம் நேற்றுக் காலை இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டதுடன், சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. காலை 8 மணிமுதல் நண்பகல் வரை இந்தச் சோதனை நடைபெற்றது.

வீடுவீடாகச் சென்று படையினர் அனைத்துப் பொருட்களையும் துருவித்துருவி சோதனையிட்டனர். சோதனையின்போது வீதிப் போக்குவரத்தையும் தடைசெய்திருந்தனர்.

இதனால் கொடிகாமத்திலிருந்து, சாவகச்சேரி வைத்தியசாலைக்கு ஓட்டோவில் சென்றுகொண்டிருந்த கர்ப்பிணிப் பெண் ஓட்டோவுக்குள்ளேயே (08 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் பாரிய தாக்குதலுக்கு புலிகள் தயாராகி வருகின்றனர்

### உளவுப்பிரிவு எச்சரிக்கை

கொழும்பு—

கிழக்கு மாகாணத்தில் பாரிய தாக்குதலொன்றை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் தயாராகி வருவது குறித்த தகவல்கள் கிடைத்துள்ளதாக உளவுப்பிரிவு எச்சரித்துள்ளது.

இந்தப் பாரிய தாக்குதலுக்காக மட்டக்களப்பு - வாகரையிலுள்ள விடுதலைப் புலிகளின் முகாமுக்கு ஆயுதம் தாங்கிய ஆயிரம் விடுதலைப் புலிகள் வந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

81 மி.மீற்றர் ரக மோட்டார்கள் உட்பட பாரிய கனரக ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்தப் பாரிய ஆயுதங்களுக்குள் விடுதலைப் புலிகளிடமுள்ள விமான எதிர்ப்பு ஏவுகணையும் அடங்கும்.

இதன்படி விமான எதிர்ப்பு ஏவுகணையொன்று வாகரைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இது சாம் 7 ரக ஏவுகணையாக இருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணத்தில் மூன்று ஏவுகணைகளைப் பயன்படுத்தியமைக்கான உறுதியான (08 ஆம் பக்கம் பார்க்க)

# அல்லைப்பிட்டி படுகொலை விசாரணை; சி.ஐ.டியின் நடவடிக்கையில் அதிருப்தி!

யாழ்ப்பாணம்—

அல்லைப்பிட்டியில் நான்கு மாத சிசு உட்பட 13 அப்பாவிப் பொதுமக்கள் கோரமான முறையில் படுகொலைசெய்யப்பட்ட சம்பவத்தின் சந்தேக நபர்களை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்த பொலிஸ் குற்றப் புலனாய்வுப்பிரிவினர் நடவடிக்கை எடுக்காமையால் அவர்களது செயற்பாடுகள் திருப்திகரமாக இல்லையென ஊர்காவற்துறை நீதிவான் ஜெயராமன் ரொக்ஸி கடுமையாகக் கண்டித்துள்ளார்.

இது தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சமர்ப்பித்த அறிக்கை குறித்து பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு அறிவிக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

அல்லைப்பிட்டியில் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு (08 ஆம் பக்கம் பார்க்க)

## சொல்ஹெய்ம், பௌயர், பிரட்ஸ்கர் ஒஸ்லோ மாநாட்டில் பங்கேற்பர்!

கொழும்பு—

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் எதிர்வரும் 8 ,9 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கூட்டத்தில் நோர்வேயின் தரப்பில் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும், இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம், விசேட சமாதான தூதுவர் ஜோன்ஸ் ஹன்சன் பௌயர் மற்றும் நோர்வேக்கான இலங்கைத் தூதுவர் ஹன்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக நோர்வே தூதரகப் பேச்சாளர் எரிக் ஹொன்ஸ்பேக் தெரிவித்தார்.

நோர்வேயில் தங்கியிருக்கும் சொல்ஹெய்ம், பௌயர் ஆகியோருடன் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் சேர்ந்துகொள்வார் எனத் தெரிவித்த அவர் - விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் நோர்வே அரசு உரிய பாதுகாப்பை (08 ஆம் பக்கம் பார்க்க)

## 2 இளைஞர்கள் சுட்டுக்கொலை!

## இந்தியா மௌனத்தைக் கலைத்து

## மட்டக்களப்பில் கடத்தப்பட்ட இளைஞர் சுட்டுக்கொலை

# 2 இளைஞர்கள் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு

வாழைச்சேனைப் பகுதியில் நேற்று மாலை இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 2 இளைஞர்கள் கொல்லப்பட்ட னர்.

கும்புறுமூலை - கல்குடா வீதியில் குறித்த 2 இளைஞர்களும் இராணுவத்தினரை இலக்குவைத்து கிளைமோர் தாக்குதலை நடத்துவதற்கு தயாராகிக்கொண்டிருந்தபோது அந்த இடத்துக்குச்சென்ற இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பியோட முயன்றவேளை (08 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் சிப்பாய் பலி

கொழும்பு

மன்னார்-நானாட்டானில் காவலில் இருந்த இராணுவத்தினர் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நேற்று மாலை 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# குடத்தனையில் சிப்பாய் பலி

வடமராட்சி

வடமராட்சி கிழக்கு சவுக்கங்காட்டுப் பகுதியில் இராணுவக் காவலரண் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார். நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதையடுத்து குடத்தனைப் பகுதி இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

# இந்தியா மௌனத்தைக் கலைத்து ஈழத்தமிழரைக் காக்கவேண்டும்!

## பாரதிய ஜனதா கோரிக்கை

சென்னை

ஈழத்தமிழரை பாதுகாப்பதற்கு இந்திய மத்திய மற்றும் தமிழக அரசு தமது மௌனத்தைக் கலைத்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாரதிய ஜனதா கட்சி தெரிவித்துள்ளது.

பாரதிய ஜனதாக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் கடந்த இரண்டு நாட்களாக சென்னையில் நடைபெற்றது. அந்தக்கூட்டத்தின் இறுதியில் வெளியிடப்பட்ட தீர்மானத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கையிலிருந்து ஆயிரக்கணக்கான தமிழர்கள் அகதிகளாக தமிழகத்துக்கு வந்துள்ளனர்.

தொடர்ந்தும் வந்த வண்ணம் உள்ள னர். இலங்கையில் தமிழரை இராணுவத்தின ரும், சிங்களவரும் தேடித் தேடிக் கொலை செய்வதாக அகதிகள் கண்ணீர் மல்கக் கூறிவருகின்றனர்.

ஆனால், இந்த விடயத்தில் தி.மு.க அரசும், இந்திய மத்திய அரசும் தொடர்ந்து மௌனம் சாதித்து வருவது (08 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டுறவு சங்க அதிகாரி கடத்தல்; திருமலையில் பணிப்புறக்கணிப்பு!

திருகோணமலை

கூட்டுறவு சங்க அதிகாரி செல்வராஜா கஜநாதன் கடத்தப்பட்டமையைக் கண்டித்து திருகோணமலையில் நேற்றுமுதல் 3 நாட்களுக்கு முழு அளவிலான பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடங்கியது.

கட்டைப்பறிச்சான் இராணுவ முகாமுக்குச் சென்றபோது இவர் அடையாளம் தெரியாத நபர்களால் கடந்த 1 ஆம் திகதி கடத்தப்பட்டிருந்தார்.

இந்தக் கடத்தலைக் கண்டித்து வ: க்கு - கிழக்கு மாகாணசபை அலுவலகம், அரச சார்பற்ற நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தபால் அலுவலகங்கள் ஆகியவற்றின் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். கடைகள் திறக்கப்பட்டிருந்தன. பஸ்சேவைகள் இயங்கின. உயர்தரப் பரீட்சை நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியான ஈச்சிலம்பற்று பிரதேச வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவுச்சங்க அதிகாரியாக செல்வராஜா கஜநாதன் பணியாற்றிவந்தார்.

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் மூதூர் கிழக்குப் பகுதிக்கு உலக (08 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் கடத்தப்பட்ட இளைஞர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு

மட்டக்களப்பு - நாவற்குடா கலாசார மண்டபத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் இளைஞர் ஒருவர் கைகள் கட்டப்பட்ட நிலையில் சுட்டுக் கொல்லப்பட்டதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் வேறு ஒரு பகுதியிலிருந்து வெள்ளை வானில் கொண்டுவரப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டிருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்துக்கு நேற்றுக்காலை சென்ற காத்தான்குடி பொலிஸார் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைத்தனர்.

இதேவேளை இவர் இராணுவத்தினராலும், அவர்களுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினராலும் கடத்திச் செல்லப்பட்டவரெனத் தெரிவிக்கப்படுகிறது.

# படையினர் சுட்டு பொதுமகன் காயம்!

யாழ்ப்பாணம்

இளவாலை - பெரியவிளான் பகுதியில் படையினரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் அந்தோனிப்பிள்ளை முடியப்பு (வயது 56) என்பவரே படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

அயல் வீட்டில் (08 ஆம் பக்கம் பார்க்க)

## ...ல் இலங்கை



ட்ரெனபிரிட்ஜ்

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின் 3 ஆம் நாள் நாளான நேற்றுமுன்தினம் இலங்கை அணி 7 விக்கெட் இழப்புக்கு 287 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

2 ஆம் நாள் ஆட்ட முடிவில் 1 விக்கெட் இழப்புக்கு 45 ஓட்டங்களைப் பெற்றிருந்த இலங்கை அணி ஆட்டத்தைத் தொடர்ந்தது.

17 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்த தரங்கவும் 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்த சங்ககாரவும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

இருவரும் மிக நிதானமாக ஆடி ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டிருந்த போது ஒரு சிக்ஸ்ர் 6 பவுண்டரிகள் அடங்கலாக 46 ஓட்டங்களைப் பெற்றிருந்த தரங்க பனேசரின் பந்துவீச்சில் குக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அப்போது ஸ்கோர் 100 ஆக இருந்தது. தரங்கவும் சங்ககாரவும் ...கிடையில் இணைப்பாட்டமாக ...ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

...தொடர்ந்து ஜெயவர்த்தன கள...ங்கினார். அவரும் சங்ககாரவும் ...ானமாக ஆடிக்கொண்டிருந்த ...ாது 9 பவுண்டரிகள் அடங்கலாக ...6 ஓட்டங்களைப் பெற்றிருந்த ...ங்ககார பிளின்ரொப்பின் பந்துவீச்...க்கு ஆட்டமிழந்தார்.

அடுத்து ஜெயசூரிய களமிறங்கினார். ஆனால் அவர் இரண்டாவது இனிங்ஸிலும் சோபிக்கத் தவறினார். அவரால் 4 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது.

அடுத்து ஜெயவர்த்தனவுடன் டில்ஷான் இணைந்துகொண்டார். இவர்கள் இருவரும் ஆடிக்கொண்டிருந்தவேளை சிறப்பாக ஆடி வந்த ஜெயவர்த்தன 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து கப்புகெதர களம் புகுந்தார். ஸ்கோர் 223 ஐ தொட்ட போது டில்ஷான் ஹொகாட்டின் பந்துவீச்சில் ஜோன்ஸிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து மஃறூப் களமிறங்கினார். ஆனால் 6 ஓட்டங்களை மட்டுமே பெற்ற அவர் பனேசரால் போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வாஸ் களமிறங்கினார். அவரும் கப்புகெதரவும் நேற்றுமுன்தினம் ஆட்டநேர முடிவு வரை ஆட்டமிழக்காதிருந்தனர். கப்புகெதர 50 ஓட்டங்களுடனும், வாஸ் 26 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் பனேசர் 3, ஹொகாட் மற்றும் பிளங்கெற் தலா 2, பிளின்ரொப் 1 விக்கெட்டை வீழ்த்தினர்.


# அழைக்கின்றோம்

**தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள்**
**நினைவுப் பேருரை - 8**

அன்புடையீர்!

மேற்படி நிகழ்வு 06.06.2006 செவ்வாய்க்கிழமை பி.ப.3.30 மணிக்கு புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

பேருரை வழங்குபவர் : திரு.ஆ.சபாரெட்ணம் (B.A.Ceylon)
(ஓய்வுவற்ற ஆசிரியர், பத்திரிகையாளர்)

விடயம் :"ஸ்பானிய - தமிழ் அனுபூதிநெறிப் போக்குகள் : புனித அவிலா திரேசம்மாள் - காரைக்கால் அம்மையார் ஒப்பீடு"

Spanish - Tamil Mystical Trends : A Comparative Study of St.Theresa of Avila and karaikkal Ammaiyar.

**உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

தனிநாயகம் தமிழ் மன்றம்,
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

விளம்பர அனுசரணை

**UNIT**
347, K.K.S. Road, Jaffna.
T.P: 021- 4590720

[C/5376]



உ
தில்லையம்பதியாள் துணை

சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி
அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

# வைகாசி மஹோற்சவ பெருவிழா

இன்று தில்லையம்பதியில் 5 ஆம் திருவிழா

**பூச்சப்பறம்**



நல்ல பூஞ்சப்பறத்தில் நாயகி நீ இருந்து - நல்லருள்
தரும் காட்சி மெய்சிலிர்க்க வைக்குதம்மா
கல்மனமும் கசிந்துருக வைத்திடுமே - சிவகாமி
அம்பாள் உந்தன் திருக்கோலமம்மா!

மதியம் மகேஸ்வர பூஜை (அன்னதானம்) இடம்பெறும்.

மாலை - 05.00 மணிக்கு வசந்தமண்டப பூஜை
07.00 மணிக்கு பூச்சப்பறம்.

**5 ஆம் திருவிழா உபயகாரர் - மூத்தொளி**

'தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்'

தில்லையம்பதி
06.06.2006

[2293]

இங்ஙனம்
பரிபாலனசபை.


# தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சு
## வடக்கு கிழக்கு மாகாண சபை
## சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேச மீளமைப்புத் திட்டம் (டார்ப்)

நிதி-ஆசிய அபிவிருத்தி வங்கி
ஆஅவ நன்கொடை இல: 0006 - சிறீ (எஸ்எவ்)

# கேள்வி அறிவித்தல் - இல: 72

1. சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேச மீளமைப்பு திட்டம் (TAARP) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") நன்கொடையொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இந்நன்கொடையின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னால் தொழில்தருநராக குறிப்பிடப்படும் NECORD திட்டக் கேள்விச் சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

அட்டவணை

| தொ இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆக குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | BT/TAARP/ID/12 | மட்டக்களப்பு கல்டி கச்சேரி அலுவலர்கள் விடுதி மீள் நிர்மாணம் | M4 கட்டடங்கள் | 210,400/= |
| 02 | MU/TAARP/03 | முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவு மாவட்ட செயலகமும் விடுதியும் மீள் நிர்மாணம். | M4 கட்டடங்கள் | 298,280/= |
| 03 | MU/TAARP/AG/02 | முல்லைத்தீவு கமநல சேவை அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர் மாவட்ட அலுவலகமும், விடுதியும் மீள் நிர்மாணம். | M4 கட்டடங்கள் | 215,000/= |
| 04 | MU/TAARP/AG/03 | முல்லைத்தீவு விவசாய உதவிப் பணிப்பாளர் மாவட்ட அலுவலகமும், விடுதியும் மீள் நிர்மாணம். | M4 கட்டடங்கள் | 215,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள்.
   - I நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   - II இலங்கை தேசிய நிர்மர்ண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக விளங்க வேண்டும்.
   - III கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.
   - IV "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.
   - V ஒப்பந்தக்காரர் மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.
   - VI கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர், கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை திட்டப்பணிப்பாளர், நீகோட் திட்டம், 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 026-2227434 ஃபக்ஸ் 026-2227401. இணையதள முகவரி: www.necord.org ஈமெயில்:necord@sltnet.lk)

6. கேள்வி ஆவணங்களை 31.05.2006 இலிருந்து 20.06.2006 வரை காலை 9.30 இலிருந்து மாலை 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 2,000/= ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்விகோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

8. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், திட்ட கேள்விச்சபை, "நீகோட்", 55,கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற விலாசமிடப்பட்டு, 21.06.2006 காலை 11.30 மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

9. முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 14.06.2006 ஆந் திகதி அன்று காலை 10.30 மணிக்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

த.லங்காநேசன்,
தலைவர், கேள்விச் சபை,
வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம்.
55, கந்தசுாமி கோவில் வீதி,
திருகோணமலை.

[C/5377]


**ராஜா** யாழ்ப்பாணம்

பரத்,
பத்மபிரியா
ஆரியா
மற்றும் பலர்
நடித்த



**பட்டியல்**

(புதிய வெளியீடு)

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

**மனோகரா** யாழ்ப்பாணம்

குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டும்
அஜித்குமார், சதா

**திருப்பதி**

(7 ஆவது வெற்றிவாரம்)



காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

**நிறைஞ்சனாஸ்** சங்கானை


சூரியா - ஸ்ருதிகா மற்றும்
விஜயகுமார் நடித்த

**ஸ்ரீ**

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

# டென்மார்க், சுவீடன், பின்லாந்து நாடுகளின் கண்காணிப்புக் குறித்து ஆராயப்படும்!

## புலித்தேவன் தெரிவிப்பு



கொழும்பு —

விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்திருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் - ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடுகளான டென்மார்க், சுவீடன் மற்றும் பின்லாந்தைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட கண்காணிப்புக்குழுவினரின் பணிகள் எவ்வளவு தூரம் சுயாதீனமாக அமையும் என்பது தொடர்பாக எதிர்வரும் ஒஸ்லோ மாநாட்டில் கேள்வியெழுப்பவுள்ளதாக புலிகளின் சமாதான செயலக பணிப்பாளர் புலித்தேவன் ஒஸ்லோ செல்வதற்கு முன்னர் தெரிவித்தார்.

கட்டுநாயக்கவில் இருந்து வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு நேற்று முன்தினம் இரவு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாளுக்கு நாள் அதிகரித்துவரும் படுகொலைகள், ஆட்கடத்தல்கள், வன்முறைகள் தொடர்பாகவும் ஒஸ்லோ மாநாட்டில் ஆராயப்படும்.


ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடுகளான டென்மார்க், சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகளின் போர்நிறுத்தக் கண்காணிப்புப் பணிகளின் சுயாதீனத்தன்மை தொடர்பாக ஒஸ்லோவில் ஆராயப்படும். ஐரோப்பிய ஒன்றியம் புலிகளை தடை செய்துள்ள நிலையில் இந்த நாடுகளின் சுயாதீனத்தன்மை தொடர்பாக ஆராயப்படும்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மொத்த செயற்பாடுகள் தொடர்பாகவும், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஒஸ்லோ மாநாட்டில் விரிவாக ஆராயப்படும்.

அரச படைகளின் ஆதரவுடன் சில ஆயுதக்குழுக்கள் அதிகமான வன்முறைகளை அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே மேற்கொள்கின்றன.

அண்மையில் வெலிக்ககந்தப் பகுதியில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்களுக்கும் - புலிகளுக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை. அந்தச் சம்பவத்தை நாங்கள் கண்டிக்கிறோம். இந்தச் சம்பவம் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# கட்சி தாவல்களைத் தடுக்க ஐக்கிய தேசியக் கட்சி தீவிரம்



கொழும்பு —

அரசாங்கத்தில் ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைவதைத் தடுக்க ஐக்கிய தேசியக் கட்சி தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தனித் தனியே பேச்சுக்களை நடத்துமாறு கட்சியின் முக்கிய தலைவர்களுக்கு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற ஐ.தே.கவின் அரசியல் விவகாரக் குழுக்கூட்டத்தில் இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட்டது.

அரசாங்கத்தில் இணைய விரும்புவோரை அடையாளம் கண்டு, அவர்களைத் தடுப்பதற்கான பேச்சுக்களை கட்சியின் மூத்த தலைவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று இந்தக் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்தார்.

மேலும் சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசாங்கத்துடன் பேச்சுக்கள் நடத்துவதற்கான பிரதிநிதியாக எம்.எச்.மொகமட்டை நியமிக்க ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

# திருமலைக்கு திருப்பியனுப்பினால் தற்கொலை செய்து கொள்வோம்!

## திருகோணமலை அகதிகள் தெரிவிப்பு

மன்னார் —

திருகோணமலையில் உள்ள எமது வீடுகளுக்கு நாங்கள் செல்ல மாட்டோம். அரசாங்கம் எங்களை வலிந்து அனுப்ப முயற்சி மேற்கொண்டால் நாங்கள் தற்கொலை செய்வோம் என தமிழகம் செல்ல மன்னாரில் காத்திருக்கும் திருகோணமலை அகதிகள் மன்னார் அரச அதிபருக்கு கூறியுள்ளனர்.

மன்னார் புனித லோறன்ஸ் தேவாலயம், புனித மரியாள் மத்திய மகா வித்தியாலயத்தில் தங்கியுள்ள திருகோணமலை அகதிகளே இவ்வாறு கூறினர்.

வடக்கு - கிழக்கு ஆளுநர், மன்னாரில் தங்கியிருக்கும் திருகோணமலை அகதிகளை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு மன்னார் அரச அதிபரிடம் தெரிவித்ததையடுத்து அரசாங்க அதிபர் அகதிகளைச் சந்தித்து கேட்டபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி திருகோணமலையில் தமிழர்கள் மீது சிங்களப் பேரினவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் அங்கிருந்து பாதுகாப்புக் கருதி தமிழகத்துக்கு செல் வதற்காக இந்த அகதிகள் மன்னார் வந்து அகதி முகாம்களில் தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புலிகளைத் தடை செய்ததன் மூலம் எதிர்பார்த்த பலனை அடையவில்லை

## அவுஸ்ரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்

கொழும்பு —

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைதடை செய்ததன் மூலம் அது எதிர்பார்த்த எதனையும்அடையவில்லையென அவுஸ்ரேலிய லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டொன் பிரன்டல் தெரிவித்தார்.

அவுஸ்ரேலிய நாடாளுமன்றில் விசேட உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது -

விடுதலைப் புலிகளை அவுஸ்ரேலியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகள் தடை செய்த போதிலும் அவர்கள் எதிர்பார்த்த எதனையும் அடையவில்லை. ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைக்கு பின்னர் இலங்கையில் தொடரும் வன்முறைகள் நிறுத்தப்படவில்லை.

இது தொடர்பாக அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சு மற்றும் சட்டமா அதிபருக்கு கடிதம் மூலம் தெரிவிக்கவுள்ளதாகவும்அவர் மேலும் தெரிவித்தார்.

# கோத்தபாய ராஜபக்ஷவுடன் பிரிட்டிஷ் கடற்படை தளபதி சந்திப்பு





கொழும்பு —

இலங்கை வந்துள்ள பிரிட்டிஷ் கடற்படை தளபதி அட்மிரல் ஜொனதன் பான்ட் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது எந்த ஒரு ஜனநாயக நாட்டுக்கும், ஜனநாயக விழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் நாட்டுக்கும் உதவத் தயாராக இருப்பதாக பிரிட்டிஷ் கடற்படைத் தளபதி தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கிடையே தற்போது நடைமுறையில் உள்ள இராணுவ பயிற்சித் திட்டங்களையும், இராணுவ உதவிகளையும் மேலும் வலுப்படுப்படுத்துவது தொடர்பாக இருவரும் விவாதித்தனர்.

முன்னதாக கடற்படை தளபதி றியர் அட்மிரல் வசந்த கரன்னகொட, விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா, இராணுவத்தை சேர்ந்த மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி ஆகியோரையும் பிரிட்டிஷ் கடற்படைத் தளபதி சந்தித்தார். இதேவேளை, திருகோணமலை துறைமுகத்தை பார்வையிட்ட அவர் கண்டிக்கும் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆயுதங்களை ஒப்படைத்த பின்பே விடுதலைப் புலிகளுடன் பேச்சாம்!

## ஜே.வி.பி மீளவும் தெரிவிப்பு



கொழும்பு —

ஆயுதங்களை ஒப்படைத்த பின்னர்தான் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது -

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை வைத்திருப்பதால் எதுவித தீர்வும் ஏற்படுவது கடினமானதாக உள்ளது. வட அயர்லாந்தில் கூட இறுதித் தீர்வுக்கு முன்னதாக ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டன. இதுதான் ஜே.வி.பியினது நிலைப்பாடு.

விடுதலைப் புலிகளின் ஆயுதக் களைவு தொடர்பாக நோர்வே செயற்படவேண்டும். அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மட்டுமே இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் செயற்படுகின்றனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அவர்கள் இயங்கவில்லை. அவர்களால் சில பகுதிக்குச் செல்ல முடியவில்லை.

வடக்கு - கிழக்கு மக்கள் ஜனநாயக உரிமைகளைப் பெற வேண்டும். அது தற்போது மறுக்கப்பட்டு வருகிறது. வடக்கு - கிழக்கு இளைஞர்கள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு சரணடைய வேண்டுமென்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பகிரங்க வேண்டுகோள் விடுக்கவேண்டும்.

அதன் பின்னர் அந்த இளைஞர்களுக்கு நல்ல கல்விச் சூழ்நிலையையும், வேலைவாய்ப்பையும் உருவாக்கித் தரவேண்டும்.

விடுதலைப் புலிகளுக்கான ஆயுத விநியோகத்தைத் தடுக்குமாறு ஆசிய பிராந்திய நாடுகளை அரசாங்கம் கேட்டுக்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை சமாதான முயற்சியில் இந்தியா பாரிய பங்காற்ற முடியும்

## மாலைதீவு நிதியமைச்சர்

கொழும்பு —

இலங்கை சமாதான முயற்சிகளில் இந்தியா பாரிய பங்காற்ற முடியுமென மாலைதீவு நிதியமைச்சர் அகமட் சகாகீத் தெரிவித்தார்.

இரு நாள் பயணமாக இலங்கை வந்துள்ள அவர் - கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் பேசும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் -

இந்தியா தற்போது சர்வதேச அனுசரணையாளரை விட இந்தப் பிரதேசத்தில் வலிமை வாய்ந்ததால் சிறப்பாக செயற்படமுடியும்.

வடக்கு - கிழக்கில் வன்முறைகள் நிறுத்தப்பட்டு இயல்பு வாழ்க்கை திரும்பவேண்டும்.

மாலைதீவு இலங்கையை விட சிறிய நாடு. எம்மால் என்ன வகையான உதவிகளை செய்ய இயலுமோ அதனைச் செய்யும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# ரி.என்.ரி கூரியர் நிறுவனத்துக்கு தேசிய தரச்சான்றிதழ் விருது!

கொழும்பு —


இலங்கை சேவைப் பிரிவின் கீழ் உலகளாவிய ரீதியில் துரித தபால் மற்றும் பொதி விநியோக சேவையை ஆற்றிவரும் ரி.என்.ரி கூரியர் சேவை நிறுவனம் 2004 ஆம் ஆண்டுக்கான இலங்கை தேசிய தரச் சான்றிதழ் விருதைப் பெற்றுள்ளது.

2004 ஆம் ஆண்டின் இலங்கை தேசிய தரச் சான்றிதழ் விருதுக்குரிய வெற்றியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போது இந்த விருது வழங்கப்பட்டது.

இலங்கை தரச் சான்றிதழ் நிறுவனம் ஒவ்வொரு வருடமும் எல்லா வியாபார நடவடிக்கைகளிலும் சிறந்து விளங்கும் நிறுவனங்களைத் தெரிவுசெய்து தேசிய தரச்சான்றிதழ் விருது வழங்கி கௌரவித்து வருகிறது.

தலைமைத்துவம், தந்திரோபாய திட்டமிடல், வாடிக்கையாளார் மற்றும் சந்தைநோக்கு, சந்தை ஆய்வு மற்றும் அறிவு முகாமைத்துவம், மனிதவள நோக்கு, செய்முறை முகாமைத்துவம், வியாபார பெறுபேறு போன்ற பிரதான கருதுகோள்களின் அடிப்படையிலேயே இந்த விருது தெரிவுசெய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை நிலைமை குறித்து பிரதமருடன் கருணாநிதி பேச்சு!



கொழும்பு —

தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி இந்திய பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி ஆகியோரை நேற்றுமுன்தினம் புதுடெல்கியில் சந்தித்து இலங்கை நிலவரம் குறித்து கலந்துரையாடினார்.

இலங்கையில் மீண்டும் போர் நிகழக்கூடிய அபாய நிலை தோன்றியுள்ளது. பெருமளவான அகதிகள் தமிழகத்துக்கு வந்த வண்ணம் உள்ளனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தலையிடுமாறு முதலமைச்சர் மு.கருணாநிதிக்கு பல தரப்புக்களும் கோரிக்கை விடுத்ததையடுத்தே அவர் புதுடெல்கியில் பிரதமரையும், சோனியா காந்தியையும் சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலைவரம் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

தமிழக முதலமைச்சராகப் பதவியேற்ற பின்னர் நேற்று முன்தினம் முதல் முறையாக இந்தியப் பிரதமரைக் கருணாநிதி சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

# தாயக விடுதலை ஒன்றே சூழலைக் காப்பாற்றும்!

## தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையம்

கிளிநொச்சி—

காலநிலைக் காரணிகளால் உலர் வலயமாக விளங்கும் தமிழீழத்தின் நிலப்பரப்பை பாலைவனமாதலிலிருந்து காப்பாற்ற தாயக விடுதலையை விரைந்து பெறுவதுதான் ஒரே தீர்வு என தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையகம் உலக சூழல் தினம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஐக்கிய நாடுகள் சபை ஆண்டுதோறும் ஜுன் 5 ஆம் திகதியை உலக சூழல் தினமாகக் கொண்டாடி வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும், அந்தக் காலப்பகுதியில் முன்னுரிமை பெற வேண்டிய சூழற் பிரச்சினைகளை அடையாளம் கண்டு கவனம் செலுத்துகிறது. அதற்கேற்ப அரச மட்டங்களில் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும், பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டுக்கான கருப்பொருளாக ''பாலைவனங்களும், பாலைவனமாதலும்'' என்பதும், சுலோகமாக "உலர் நிலங்களைப் பாலைவனமாக்காதே" என்பதும் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

பூமியின் மொத்த நிலப்பரப்பில் 40 சதவீதம் வரண்ட உலர் வலயங்களாகும். இது இரண்டு பில்லியனுக்கும் மேலான மக்களுக்கு வாழ்வளித்துக் கொண்டிருக்கிறது.

ஆனால் காலநிலையும், மனித நடவடிக்கைகளுமாகச் சேர்ந்து பூமிக்கு பெரும் அச்சுறுத்தலாக இந்த உலர் நிலங்களை வெகு வேகமாக உற்பத்திக்கு உகந்த நிலம் அல்லாதவையாக மாற்றி வருகின்றன. உலகில் மூன்றில் ஒரு பங்கு நிலம். இவ்வாறு வனப்பையும், வளர்ப்பையும் இழந்து ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களின் ஆரோக்கியத்தையும், அன்றாட வாழ்க்கையையும் வெகு மோசமாகப் பாதித்துள்ளது. இதனாலேயே உலர் வலயங்களைப் பாலைநிலம் ஆக்காதே என்று உலகம் பூராகவும் உலர் நிலங்களைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகளில் ஐ.நா ஈடுபட்டுள்ளது.

இலங்கைத் தீவில் தமிழர் தாயகமும் ஓர் வரண்ட வலயமாகும். இருந்தும் உயிர்ப் பல்வகைமை மிக்க உலகின் 25 நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இடம்பெற்றிருப்பதற்கு தென்னிலங்கையின் ஈரவலயம் மட்டும் காரணம் அல்ல. மழைவீழ்ச்சி குறைந்திருந்தும் எமது தாயகப் பரப்பு தாங்கி நிற்கும் எமக்கே உரித்தான உயிரினங்களும் காரணம் ஆகும்.

அந்த அளவுக்கு செழிப்பு மிக்க உயிர்வளத்தைப் பேணுவதாலேயே எமது சராசரி மனதுக்கு தமிழீழத்தின் இயற்கைச் சூழல் ஒரு வரண்ட வலயம் என்பது ஞாபகத்துக்கு வருவதில்லை. ஆனால், தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் தமிழர் தாயகமும் பாலைவனமாகக் கூடிய ஒரு விழிம்பு நிலையிலேயே இருக்கின்றது என்பது துரதிஷ்டவசமானதொரு உண்மையாகும்.

அரசு எமது தாயகத்தின் மீது தொடுத்து வரும் போர் காரணமாகவே இந்த நிலை உருவாகும் வாய்ப்பு தோன்றியுள்ளது. இயற்கை எமது தாயகத்தை போர்த்தியிருந்த பசுஞ் சீலைகளான பனங்கூடல்களை இராணுவம் போர்த்தேவைகளுக்காக வெகுவாக அழித்து வருகின்றது. உயர் பாதுகாப்பு வலயம் என்று பூர்வீக நிலங்களில் இருந்த பெருமளவான மக்களை விரட்டியது. கவனிப்பாரற்ற நிலம் கரிசலாக காய்ந்து வருகிறது.

மக்கள் குறுகிய பரப்பில் அடர்ந்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டதில் இவர்களின் அளவுக்கு மீறிய வளப் பயன்பாட்டால் நிலம் தனது நீர்ச் சுரப்பை மெல்ல மெல்ல இழக்கத் தொடங்கியிருக்கிறது. இந்த உயிரின எதிர்விளைவுகள் ஐ.நாவின் கருப்பொருளில் நாமும் கூடுதலான கவனம் செலுத்த வேண்டிய கட்டாய நிலையை உருவாக்கியுள்ளது.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் அதன் ஒவ்வொரு கட்டத்திலும் சூழல் பாதுகாப்புக் குறித்து மிகுந்த அக்கறையுடனேயே தனது நகர்வுகளை மேற்கொண்டு வந்துள்ளது. இதற்கு வாழ்வா - சாவா என்ற நிலை இருந்தும்கூட, தமிழீழ மக்களும் போதிய ஒத்துழைப்பை வழங்கி வந்துள்ளனர். இந்த நிலையில் எமது மக்கள் தங்கள் பகுதிகளில் மீளக்குடியேறி, தங்கள் நிலங்களில் உலாவி வரக்கூடிய இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதன்மூலமே அழுத்திக் கொண்டிருக்கும் சூழற் பிரச்சினைகளில் இருந்து தாயகம் முழுமையான விடுதலையைப் பெறமுடியும். எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை விரைந்து முடிப்பதுவே இதற்கான முதற்படியாகும்.

மேலும், ஐ.நாவின் உலர் நிலங்களைப் பாலைநிலம் ஆக்காதே - என்ற கோஷம் மக்கள் கைகளுக்கு எப்போது அவரவர் நிலங்கள் கிடைக்கப்பெறுகின்றதோ அப்போது தான் முழுமையான அர்த்தம் பெறும். எமது மக்களின் நியாயமான தேசிய விடுதலைப் போராட்டம் வெற்றி பெற்று அவர்களே அவர்களது தாயகத்தை முழுமையாக நிர்வகிப்பதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது உலக சூழல் தினம் கொண்டாடும் அத்தனை நாடுகளின் முன்பாகவும் உள்ள ஒரு அறப் பணியாகும்.

மக்களை அழுத்தும் பிரச்சினைகளிலிருந்து விடுதலை கிடைக்கும் போது மட்டுமே - மனிதனின் அழுத்தங்களிலிருந்து இயற்கையும் விடுதலை பெறமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கட்டுமானப் பயிற்சி நிறைவு நாள் நிகழ்வு!

வட்டக்கச்சி—

வட்டக்கச்சிப் பிரதேச வர்த்தகர்களுக்கும், பணியாளர்களுக்குமான மக்கள் கட்டுமானப் பயிற்சி நிறைவு நாள் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை மைதானத்தில் கரும்புலி மேஜர் மங்கை பயிற்சிப் பாசறையில் இடம்பெற்றது.

காலை 10 மணிமுதல் பயிற்சியில் ஈடுபட்டவர்களுக்கான விளையாட்டுகள் இடம்பெற்றதுடன், மதியம் அவர்களுக்கான உணவும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மாலை நிகழ்வுகள் 5 மணியளவில் ஆரம்பமானது. இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை தமிழீழ அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியைக் கட்டளைத் தளபதி கேணல் பால்ராஜ் ஏற்றினார்.

தொடர்ந்து கரும்புலி மேஜர் மங்கையின் திருவுருவப்படத்துக்கான ஈகச்சுடரை அவரின் தந்தை இரத்தினம் ஏற்றினார். மலர் மாலையை கிளிநொச்சி மாவட்ட கல்விக்கழகத் துணைப் பொறுப்பாளர் அருள் மாஸ்டர் அணிவித்தார்.

தொடர்ந்து வட்டக்கச்சிப் பிரதேச மக்கள் கட்டுமானப்படைக்குப் பொறுப்பான சாகியன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் - கருத்துரைகளை கிளிநொச்சி மாவட்ட மக்கள் கட்டுமானப் பயிற்சிப் பொறுப்பாளர் சுரேஸ், தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோரும், சிறப்புரையை கட்டளைத் தளபதி கேணல் பால்ராஜும் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் பொறுப்பாளர்கள், தளபதிகள், புலிகளின் பயிற்சி ஆசிரியர்கள், கிராம சேவையாளர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இரவு நிகழ்வாக கலை பண்பாட்டுக் கழகத்தினரின் மகளிர் இசைக்குழுவின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (09)

## கூட்டம்

கிளிநொச்சி—

கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டமும் நடைபெறும். எனவே சம்பந்தப்பட்ட அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் அறிவித்துள்ளார்.

## சிறப்பு மருத்துவ முகாம்

பூநகரி—

முழுங்காவில், நாச்சிக்குடாவில் நாளை தமிழீழ சுகாதார சேவையினரால் மருத்துவ சேவை வழங்கப்படவுள்ளது.

இந்த இலவச மருத்துவ முகாமில் பொது மருத்துவம், சுதேச மருத்துவம், பற்சிகிச்சை, கண்பரிசோதனை போன்றனவும், நீர் வெறுப்பு நோய் தொடர்பான விடியோ திரைப்படக் காட்சிகளும், கண்காட்சியும் நடைபெறவுள்ளது. (பூ)

## அறநெறிப் பாடசாலை திறந்து வைக்கப்பட்டது

இராமநாதபுரம்—


இராமநாதபுரம் அருள் மிகு மாவடி ஸ்ரீ மாரி அம்பாள் ஆலய அறநெறிப் பாடசாலை திறப்புவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை பகல் 11 மணிக்கு க.தர்மசூரியர் தலைமையில் இடம்பெற்றது.


பாடசாலையின் பெயர்ப்பலகையை கரைச்சிப் பிரதேச விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தம் திரைநீக்கம் செய்து வைக்க, அறநெறிப் பாடசாலையின் நுழைவாயிலை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம், மண்டப அறையை தவத்திரு கணேசானந்தா மகாதேவ சுவாமிகள் ஆகியோர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர்.

தொடர்ந்து ஆசியுரையைத் தவத்திரு கணேசானந்தா மகாதேவா சுவாமிகள், சிவசிறி கு.இரத்தினேஸ்வரக் குருக்கள் ஆகியோர் வழங்கினர்.

தொடர்ந்து திருநெறிக் கழகத் தலைவர் வே.மகாலிங்கம், கிளிநொச்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் முருகவேல், கரைச்சி பிரதேச விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தம், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் கலாசார அமைச்சு உத்தியோகத்தர், கிராம சேவகர்கள், சமூக தொண்டர்கள், ஆலய பரிபாலனசபையினர், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ)





முழங்காவில் மகாவித்தியாலயத்தில் தமிழீழ வைப்பகத்தால் சிறுவர் சேமிப்பு அலகு திறந்து வைக்கப்படும் நிகழ்வில் - மாணவி ஒருவருக்குத் தமிழீழ வைப்பகப் பணிப்பாளர் சோழமறவன் பரிசில் வழங்குவதையும், மாணவர்கள் - வைப்பகத்தின் கையேடுகளுடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## நீர்வெறுப்பு நோயைக் கட்டுப்படுத்த தமிழீழ சுகாதார சேவை நடவடிக்கை

வட்டக்கச்சி—

தமிழீழ சுகாதார சேவையினரால் இந்த மாதம் நீர் வெறுப்பு நோய் தடுப்பு மாதமாகப் பிரகடனம் செய்யப்பட்டு அதற்கான பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தற்போது விசர் நாய்க்கடியால் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது. இதிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்படி புளியம்பொக்கணை, கல வெட்டித்திடல், தருமபுரம், விசுவமடு, முரசுமோட்டை, உழவனூர், குமரபுரம், பரந்தன், ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தச் செயற்பாடுகளில் தமிழீழ சுகாதார சேவையினருடன், கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

தொடர்ந்து வன்னிப் பெருநிலப் பரப்பின் ஏனைய பிரதேசங்களுக்கும் இந்த நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்படவுள்ளதால், பொது மக்களை ஆதரவுதருமாறு தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர்.

அந்த வகையில் பூநகரிப் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் பின்வரும் நாட்களில் குறித்த கிராமங்களில் நாய் அழிப்புப் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன், குறிப்பிட்ட கிராமங்களிலிருந்தும் குறிப்பிட்ட திகதிகளுக்கு முன்னர் வீதிகளில் திரியும் நாய்களைப் பிடித்து, பிரதேச சபையிடம் ஒப்படைப்பவர்களுக்கு 40 ரூபா பணம் வழங்கப்படு மெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராம ரீதியாக நாயழிக்கும் நாட்கள் கீழே வருமாறு -

8 ஆம் திகதி கறுக்காய்த்தீவு, 9 ஆம் திகதி வாடியடி, 10ஆம் திகதி 4 ஆம் கட்டை, செட்டியார் தரைவெளி, 12 ஆம் திகதி பள்ளிக்குடா, 13 ஆம் திகதி ஆலங்கேணி நல்லூர், 14 ஆம் திகதி செம்மண்குன்று, 15 ஆம் திகதி கௌதாரிமுனை, பினாசி ஓடை, மண்உண்ணித்தலை, 16 ஆம் திகதி பரமன்கிராய், பெற்புலவு, 19 ஆம் திகதி தம்பிராய், செயலியா தீவு என்னும் ஒழுங்கில் நாயழிப்புப் பணி மேற் கொள்ளப்படும்.

வீடுகளில் நாய் வளர்ப்போர் உரியவர்களிடம் அனுமதி பெற்று அதற்கான ஒழுங்கு முறையுடன் வளர்க்கலாம் எனவும் தமிழீழ சுகாதார சேவையின் பூநகரி பிரதேச இணைப்பாளர் அரவிந்தன் தெரிவித்துள்ளார். (09, பூ)

புதிதாக நியமனம் செய்யப்பட்ட

# பட்டதாரி ஆசிரியர்களுக்கு மூன்று மாத பயிற்சிநெறி

மானிப்பாய் —

அரசால் புதிதாக நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு வகுப்பினைக் கற்றல்- கற்பித்தல் மற்றும் தொழில்சார் வாண்மை விருத்தி என் பனவற்றை அடிப்படையாகக் கொண்டு மூன்று மாத காலப் பயிற்சி வழங்கப்படவுள் ளது.

இவர்களுக்கான பயிற்சிகள் வார இறுதி மற்றும் விடுமுறை நாட்களில் வழங்கப்படவுள்ளது. இந்தப் பயிற்சியை வழங்குவதற்கு கொழும்பு, யாழ்ப்பாணம், நாவல, குருநாகல் உள்ளிட்ட ஆறு முக்கிய நகரங்களில் பயிற்சி மையங்கள் நிறுவப்படவுள்ளன.

பட்டதாரி ஆசிரியர்களுக்கு மூன்று மாத காலப் பயிற்சியை வழங்குவதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விப் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

பாடசாலைக் கடமைகளில் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாத வகையில் கட்டம் கட்டமாக ஒவ்வொரு நிலையத்துக்கும் குறிப்பிட்ட தொகை பட்டதாரி ஆசிரியர்களே தெரிவு செய்யப்படவுள்ளனர்.

ஆசிரியர்கள் மத்திய் நிலையங்களுக்குச் சென்று பயிற்சி, விரிவுரைகளில் கலந்து கொள்வதற்கு - திங்கள், வெள்ளிக்கிழமைகளில் கடமை லீவும் வழங்கப்படவுள்ளது.

நாடு பூராகவும் ஒருங்கமைக்கப்பட்ட ஒரே நடைமுறையைப் பின்பற்றுவதற்கு ஏற்ற விதத்தில் பயிற்சி தொடர்பான பாடத்திட்டம் ஒன்று தயார் செய்யப்பட்டுள்ளது.

பயிற்சியின் இறுதியில் பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டதாரி ஆசிரியர்களைப் பயிற்சியில் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை கடந்த மே மாதம் 20 ஆம் திகதி இறுதி நாளாக அறிவிக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (100)

# புதிய காவலரண் அமைப்பு

இணுவில் —

மல்லாகம் - காங்கேசன்துறை வீதியில் புதிய இராணுவக் காவலரண் ஒன்று இரவோடிரவாக இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மல்லாகம் மயூரன் சனசமூக நிலையக் கட்டடத்தில் இந்தக் காவலரண் அமைக்கப்பட்டுள்ளது.

மிகவும் சன நடமாட்டம்மிக்க, மக்கள் செறிந்து வாழும் இந்த இடத்தில் குறிப்பிட்ட இராணுவ காவலரண் அமைந்துள்ளமையால், இந்தப் பகுதி மக்கள் இடம்பெயரும் நெருக்கடியை தாங்கள் எதிர் நோக்கியுள்ளதாகத் தெரிவித்தனர்.

புதிதாக அமைக்கப்பட்ட இந்தக் காவலரணில் சுமார் 15 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். குடாநாட்டில் இராணுவத்தினர் தொடர்ச்சியாக வீதிகளில் புதிய இராணுவச் சோதனை நிலையங்கள் என்ற பெயரில் சிறிய அளவில் இராணுவ முகாம்களை அமைத்து வருவதால் மக்கள் அச்சமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சுனாமியால் பாதிப்புற்றோருக்கான வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம்

வல்வெட்டித்துறை —

சிறுவர் பாதுகாப்பு இலங்கை நிறுவனத்தின் நிதி உதவியுடன், வெண்புறா நிறுவனம் - வல்வெட்டித்துறையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீள் நிரப்பும் திட்டத்தை மேற்கொண்டு வருகிறது.

அந்த அடிப்படையில் 94 பயனாளிகளுக்கு கட்டுமரமும், 30 ஆயிரம் ரூபா பெறுமதியான வலையும், 221 பயனாளிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக்கான மூலதனத்தை ஏற்படுத்தும் வகையில் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்கள் மற்றும் மூலதனங்களை வழங்கியுள்ளது.

இவற்றுள் மீன் வியாபாரம், சிறு கடை, பலகார உற்பத்தி, தச்சு, மேசன், விவசாயம், பண்ணை உற்பத்தி என்பன அடங்குகின்றன. அதேவேளை 36 பயனாளிகளுக்கு தையல் இயந்திரமும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தாதியர் பயிற்சி ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம் —

சுகாதார பராமரிப்பு மற்றும் போசனை அமைச்சு தாதியர் பயிற்சிக்கு ஆண் - பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்களை கோரியுள்ளது.

கடந்த 2005 ஆம் ஆண்டு இடம் பெற்ற உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன், க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் சிங்களம் அல்லது தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இந்தப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரர்கள் வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவ ராக இருப்பதுடன் விவாகமாகாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். வயதெல்லை 23 ஆம் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர் வரும் 23 ஆம் திகதிக்கு முன்னதாக பணிப்பாளர் (நிர்வாகம்) சுகாதார பராமரிப்பு மற்றும் போசனை அமைச்சு சுவசிரிபாய,385 வனபத்தேகம, விமல வங்கதேரர் மாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

# பொன். சிவகுமாரன் குறித்து பேச ஈ.பி.டி.பிக்கு அருகதை இல்லை

## மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

தியாகி பொன். சிவகுமாரன் குறித்து பேசுவதற்கு ஈ.பி.டி.பியினருக்கு எந்த அருகதையும் இல்லை என யாழ். மாவட்ட தமிழ் மாணவர்கள் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழ் மக்களின் விடுதலைக்காக தனது மாணவ பருவத்திலேயே போராட்டத்தை ஆரம்பித்து வீரச்சாவைத் தழுவிக் கொண்ட முதல்மாவீரன் தியாகி பொன். சிவகுமாரன் அகிம்சைப் போராட்டத்தின் மூலம் தமிழ் மக்களின் விடுதலையைப் பெற முடியாது. ஆயுதப் போராட்டமே விடுதலையைப் பெற்றுத் தரும் என்று திடமாக நம்பி அந்த வழியிலேயே வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

உயிருடன் தான் பிடிபடக்கூடாது என்பதற்காகவே அவர் தன்னை அழித்துக்கொண்டார். ஆனால், இன்று எதிரியின் அடிவருடிகளும், காட்டிக் கொடுப்பவர்களும், தமிழினத் துரோகிகளும், படையினருடன் இணைந்து செயற்படும் ஆயுதக் குழுவினரும் முடிந்தால் திருந்திக் கொள்ளுங்கள்.

அதைவிடுத்து அரசியல் நடத்துகிறோம், ஜனநாயகம் பேசுகிறோம் எனக் கூறி அரசுடன் இணைந்து தமிழின விடுதலைப் பாதையின் தடைக்கற்களாக இருக்க வேண்டாம் எனக் கூறிக்கொள்கிறோம்.

அதுவே, முதல் மாவீரன் பொன். சிவகுமாரன் போன்ற ஆயிரம் ஆயிரம் மாவீரர்களுக்கு, அவர்களின் தியாக வாழ்வுக்கு தாங்கள் கொடுக்கும் மதிப்பாக இருக்கும் என்பதை அவர் வீரச்சாவடைந்த இன்றைய தினத்தில் தமிழ் மாணவர் சமூகமாகிய நாம் தெரிவித்துக் கொள்கிறோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீடமைப்புத் திட்டத்துக்கு 189 குடும்பங்கள் தெரிவு!

கரவெட்டி —

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்துக்கு பல கிராமங்களைச் சேர்ந்த 189 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக வடம ராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

கப்பூது, கரப்பன், அந்தணன் திடல், காட்டுப்புலம், இலந்தைக்காடு, கொற்றாவத்தை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 189 குடும்பங்களே இந்த வீட்டுத்திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட வீட்டுத்திட்ட பயனாளிகள் பற்றிய விபரங்கள் அந்தப்பகுதிகளில் உள்ள பொது இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

# பனந்தொழில் வல்லுநருக்கான உதவி வழங்கல் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம் —

கெயர் சர்வதேச தொண்டு நிறுவன அனுசரணையுடன் பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தினூடாக பனந்தொழில் வல்லுநருக்கான உதவி வழங்கும் நிகழ்வு இன்று காலை 10.30 மணிக்கு பண்டத்தரிப்பு பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அரச அதிபர் கே.கணேஷ், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அ.அன்ரன் வேதநாயகம் மற்றும் கெயர் நிறுவன குழுத் தலைவர் இ.பாலகிருஸ்ணன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.ஜயாத்துரை ஆகியோர் கலந்து கொள்வர்.

வரவேற்புரையை தி.பரந்தாமன், தலைமை உரையை அ.பெனடிற் ஆகியோர் நிகழ்த்துவர்.

சிறப்புரையை கி.கனகரட்ணம், பொது முகாமையாளர், இ.பாலகிருஸ்ணன், அ.அன்ரன் வேதநாயகம், சி.ஜயாத்துரை ஆகியோர் நிகழ்த்துவர். தொடர்ந்து உதவி வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

# குடாநாட்டில் இரவு வேளை துண்டிக்கப்படும் மின்சாரம்

மானிப்பாய் —

யாழ்.குடாநாட்டில் தற்போது இரவு வேளைகளில் அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படுவதால் மின்சாரப் பாவனையாளர்கள் பெரிதும் சிரமத்துக்கு ஆளாகி வருகின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பல தடவைகள் முறைப்பாடு தெரிவித்தும், எந்தவித நன்மையும் கிடைக்கவில்லையென மின் பாவனையாளர்கள் கவலை தெரிவித்தனர்.


தற்பொழுது க.பொ.த. உயர்தரப் பரீட்சை நடைபெற்று வருகின்ற இந்த நேரத்தில் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்கள் இந்த மின்சாரத் துண்டிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் குடாநாட்டில் அண்மைக் காலமாக மண்ணெண்ணெய்க்குத் தட்டுப்பாடு நிலவி வருவதால் - பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை - இரவு நேரங்களில் அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படுவதால் திருட்டுச் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே, இரவு நேரங்களில் மின்சாரம் துண்டிக்கப்படுவதை தவிர்ப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மின் பாவனையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(100)



யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில் - வலிகாமம் பகுதியிலுள்ள ஆலயமொன்றில் மூல விக்கிரகத்தைப் பெயர்த்து அதன் கீழுள்ள தங்கம் திருடப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (72)

# ஏகாதசி விரத பூசை

கொக்குவில் —

நாகேஸ்வரம், அளவெட்டி தெற்கு ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை காலை 8 மணிக்கு ஏகாதசி விரத பூசை நடைபெறும்.

காலை 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று 10 மணிக்கு ஸ்ரீமத் நாராயணர் தேவியர் சகிதம் திருவீதி எழுந்தருள்வார். அதனைத் தொடர்ந்து 9 ஆம் திகதி வைகாசி விசாக வைபவம் மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் விஷேட அபி ஷேக ஆராதனைகளுடன், பூசை வழிபாடுகள் இடம் பெறும். அதேவேளை இரு பூசை தினங்களிலும் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.


# வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம் —

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் தரம் 11 வகுப்புகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டு பாடங்கள் நடைபெற்று வருகின்றன.

தரம் 11 வகுப்பு மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளுக்காக தவறாது வகுப்புகளில் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

# இன்று தமிழீழ மாணவர் எழுச்சி நாள்



தியாகி பொன் சிவகுமாரன்

கல்வி என்பது தமிழனின் பரம்பரைச் சொத்து என்ற பாரம்பரியம் என்றும் பேணப்பட்டு வரும் முதுசம் ஆகும். வடக்கு - கிழக்கின் பூர்வீக குடிகளான தமிழ் பேசும் மக்கள் தம் வாழ்வியலின் வளர்ச்சித் தன்மையை கல்வி ரீதியாகவே அன்றிலிருந்து அடக்குவதற்கும் பெரிதும் பயன்பட்டது.

அத்தோடு தமிழ் மாணவர்களுக்கு வழங்கப்படும் பாடநூல்கள் சிங்கள, பௌத்த கலாசாரத்தை வலியுறுத்துவதாயும், பௌத்த மதவாத கோட்பாடுகளையும், இனவாதத்தை தூண்டும் கருத்துக்களை வெளிப்படுத்தியும் நின்றது. அத்தோடு சிங்களம் தான் இலங்கையின் தேசிய இனம் என்பதை வலியுறுத்தியும் நின்றது. உதாரணமாக தமிழ் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பாடநூலில் 1948 ஆம் ஆண்டு பெறப்பட்ட சுதந்திரம் சிங்களவர்களால் மட்டுமே பெறப்பட்டது. எனவே, சிங்களவர் களால் மட்டுமே அனுபவிக்கப்பட வேண்டு மென குறிப்பிடப்பட்டது. அத்தோடு அரசகரும மொழியாக சிங்களம் மாற்றப்பட்டதும் தமிழர் கல்வியில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது.

ஒரு புறம் இன ஒடுக்குமுறை, வன்முறை ரீதியாக தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்டும். மறுபுறம் இவ்வாறான அரசியல் சதிகள் மூலம் தமிழர்கள் புறந்தள்ளப்பட்டுக்கொண்டு சென்றார்கள்.


இதனால் தமிழ் மாணவர்களின் அரசியல் போராட்ட வரலாற்றிலும், கல்வி ரீதியான ஒடுக்கு முறையிலும் வன்மையான

அதனால் உதித்த மாணவர் இயக்கங்கள் பாரிய போராட்டங்களையும், ஆயுதக் கிளர்ச்சிகளையும் ஏற்படுத்தி எதிர்ப்பை வெளிக்காட்டத் தொடங்கினர்.

1971ஆம் ஆண்டில் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த போது உணர்ச்சி வேகம் கொண்டெழுந்த யாழ் இந்துக் கல்லூரி மாணவன், விடுதலைப் போரின் முதல் மாவீரன் தியாகி பொன்.சிவகுமாரன் மற்றும் மாணவர்களும் சேர்ந்து அரசுக்கெதிரான ஆயுதக்கிளர்ச்சிகளை ஆரம்பித்து தாயக மீட்புப்போருக்கு வித்திட்டனர்.

பலமான ஒரு போராட்டத்துக்கு வழிகாட்டிய தியாகி பொன்.சிவகுமாரன் 1977ஆம் ஆண்டு வீரமரணம் அடைந்தார். அவரின் வீரமரணம் தமிழர்களின் மனதில் ஓர் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தி நின்றது. தமிழர்கள் தமது மறுக்கப்பட்ட உரிமைகளை ஆயுதரீதியிலான போரினால்தான் வெற்றிகொள்ள முடியும் என்ற யதார்த்த ரீதியான உண்மையை உணர்த்தி நின்றது.

அதன் பின்னர் எமது தலைவனின் உதயம் உன்னத விடுதலையைப் பெறுகின்ற உயரிய எண்ணத்தை சுமந்தபடி இளைஞர்



மேஜர் முரளி

பலபாகங்கள் மீட்கப்பட்டு அங்கு மாணவர்களின் சுதந்திரமான கல்வியை தமிழீழ தேசியத் தலைவர் நிலைநாட்டியுள்ளார்.

ஆனால் தொடர்ந்தும் ஆக்கிரமிப்பாளர்களால் அல்லல்படும் பிரதேசங்களில் தமிழ் மாணவர்கள் - கல்வி ரீதியான பல

# கல்வி ரீதியான அடக்கு முறைகளும் தமிழ் மாணவர்களின் கள நிலையும்

இன்று வரை கொண்டு வருகின்றனர்.

சிங்களப் பெரும்பான்மை இனத்தோடு ஒப்பிடுகையில் - கல்வி ரீதியான உயர் ஸ்தானங்களில் இருந்தவர்கள் தமிழர்கள் என்பதை வரலாறு எமக்கு உணர்த்தி நிற்கும். இந்த வேளை தமிழ் மக்கள் மீதான அடக்கு முறையும் அதன்பாலே பிரயோகிக் கப்பட்டதென்பதும் வெளிப்படையான உண்மை.

இலங்கையின் இனவிரிசல் என்பது பிரித்தானியர் ஆட்சிக் காலப்பகுதியில் 1921 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட மனிங் அரசியல் சீர்திருத்தங்களின் பின்னர் ஆரம்பிக் கப்பட்டது. எனினும் பின்வந்த சீர் திருத்தங்களும், தீர்வுத்திட்டங்களும் தமிழ் மக்களின் உரிமைகளை உறுதி செய்யுமென எதிர்பார்க்கப்பட்ட போதும் எந்தவித பலனும் இல்லாத நிலையில் - 1948 ஆம் ஆண்டு இலங்கையின் இறை யாண்மை இலங்கைப் பிரஜைகளின் கையில் கொடுக்கப்பட்டதைத் தொட ர்ந்து தமிழர்கள் மேலும் புறந்தள்ளப்பட்டனர்.

தொடர்ந்து வந்த ஆண்டுகளில் தமிழ் இனத்தின் மீது சிங்கள ஆட்சியாளர்கள் இன ஒடுக்குமுறைகளுக்கு எதிராக ஓரளவாவது தமிழ்ர்களது உரிமைகளை உறுதி செய்யும்படி தமிழ் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் பலவும் கலவரங்கள் மூலமும், காடைத்தனங்கள் மூலமும் இனவாதிகளால் செயலூக்கம் அற்றவையாக மாற்றப்பட்டன.

இருப்பினும் கல்வி ரீதியாக தமிழர்கள் ஈடாட்டம் காண்கின்ற போதுதான் இன அழிப்பு விஸ்தீரணம் பெறும் எனக்கருதிய சிங்களப் பேரினவாதிகள் - கல்வி ரீதியான ஒடுக்கு முறைகளுக்குள் புகுந்து கொண்டார்கள். கல்வி ரீதியான அடக்கு முறைகள், ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பின் ஆரம்பக்கட்டத்திலிருந்து சிறிதளவு துளிர்விடத் தொடங்கினாலும் 1960 ஆம் ஆண்டுகளுக்கு பின்னரே தமிழ் மாணவர்களை நேரடியாகப் பாதிக்கத் தொடங்கியது.

1960 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்து,பௌத்த, கிறிஸ்தவ மதத் தலைவர்களால் நடத்தப்பட்ட பள்ளிகள் அனைத்தும் குறிப்பாக ஆசிரிய நிர்வாகம், பாடசாலை நிர்வாகம், நூல்நிலைய நிர்வாகம் என்பன அரசின் கைகளுக்கு மாறிய நிலையில் அரசியல் செல்வாக்கு பள்ளி நிர்வாகத்தில் அதிகரித்தது. இது தமிழ் மாணவர்களை ஒடுக்குவதற்கும், கல்வி ரீதியாக

தாக்கம் ஏற்பட்டது 1970 ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலப்பகுதியிலேயே ஆகும். தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென் றெடுக்கும் வீராவேச எண்ணங்கள், சிங்கள அரசின் அடுக்களைச் சூளையுள் தள்ளப்பட்ட தமிழர்களின் உரிமைகளை வென் றெடுக்கும் ஆயுதக் கிளர்ச்சி ரீதியான எண்ணம் 1970ஆம் ஆண்டுகளின் பின்னரேயே



எழுந்து வளரத் தொடங்கியது.

ஏனெனில் தமிழர்களின் தன்னிகரற்ற கல்வி ஆற்றலை அடக்கும் முகமாக தமிழ் மக்களின் முயற்சிகளைத் தடுக்கும் நோக்கோடு - 1970 ஆம் ஆண்டுகளில் சிறிமாவோ அரசாங்கத்தால் பல்கலைக் கழகத்துக்கு மாணவர்களை தெரிவு செய்யும் முறை தொடர்பாக கொண்டு வரப்பட்ட தரப்படுத்தல் முறையே தமிழ் மாணவர்களை கிளர்ந்தெழ வைத்தது.

அனைவரும் விளங்கக் கூறு வோமானால் தமிழ் மாணவர்கள் மருத்துவ பீடத்துக்கு செல்ல உயர்தரப் பரீட்சையில் 400 புள்ளிகளுக்கு 250 புள்ளிகள் பெறவேண்டு மெனவும், சிங்கள மாணவர்கள் 220 புள்ளிகள் பெற்றால் போதுமானது என்ற முறைமை கொண்டுவரப்பட்டது. இது தமிழ் மாணவர்களைக் கடும் ஆத்திரத்துக்கு உட்படுத்தியது.

களை அணிசேர்த்து, விடுதலைப்போரை ஆயுத அரசியல் வளர்ச்சியோடு வேகமாக நடத்த வழிகோலியது. ஒட்டுமொத்தமாக பார்ப்போமானால் - தேசியத் தலைவரால் வழிநடத்தி, வீறுகொண்டு எழுந்திருக்கும் விடுதலைப் போராட்டம் மாணவர்களின் அடக்கு முறையில் இருந்தே ஆரம்பமானது எனலாம்.

தமிழர்கள் கல்வி ஒடுக்குமுறை வரலாற்றின் மறக்க முடியாத சம்பவம் 1981 ஆம் ஆண்டும் அரங்கேற்றப்பட்டது. தமிழர்களின் கல்விக்கு மகுடமாகத் திகழ்ந்து, தமிழர்களின் சின்னமாக விளங்கிய யாழ்.நூல்நிலைய எரிப்பானது - தமிழர் மனதில் ஆறாத வடுவாக உள்ளது. அன்று காணி,காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்த காமினி திசநாயக்கவும் குண்டர்களும் யாழ். நூல் நிலையத்தை எரியூட்டினர். இதில் பெறுதற்கரிய 98 ஆயிரம் நூல்கள் தீயிலேயே சாம்பலாக்கப்பட்டது. இது மாணவர் மனதில் பெரும் தாக்கத்தை உண்டு பண்ணியது.

அரசின் இந்த தொடர்ச்சியான மாணவர் அடக்கு முறையால் பெருமளவான மாணவர்கள் விடுதலைப்போராட்டத்தில் இணைந்து கொண்டார்கள். அவர்களின் விடுதலைப் பயணத்தில் எமது தாயகத்தின்

வடிவங்களில் வடிவமைத்து பேரின வாதிகளால் ஏவிவிடப்படும் அடக்கு முறைகளால் தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

பாதுகாப்பு வலயம், பொருளாதார தடைகள் என்று மாணவர்கள் மீது பிரயோகிக்கப்பட்ட அடக்குமுறை, இன்றும் மாணவர்கள் தாக்கப்படுதல், கடத்தப்படுதல், கொலை செய்யப்படுதலென வேகமடைந்து அடக்கு முறையின் இறுதிக்கட்டத்துக்கு வந்துள்ளது.

சிங்கள அரசின் கல்வி அடக்கு முறைக்கெதிராக மாணவர்கள் அண்மையில் ஏற்படுத்திய அகிம்சை ரீதியான போராட்டங்கள் அரசினதும், சர்வதேசத்தினதும் கண்ணில் படாமல் இருந்தது வேதனைக்குரியதே. மேலும் சிங்கள அரசு இராணுவப் பயங்கர வாதத்தின் மூலம் மாணவர் போராட்டங்களை அடக்க முயற்சிகளை எடுத்து வருகின்றது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் ஜூன் - 6 இல் ஒன்றுகூடும் மாணவர் எழுச்சி நாளில் மாணவர்கள் எழுப்பிய கோசங்களைவிட, இந்த முறை ஜூன் - 6 இல் எழுப்பப்பட வேண்டிய கோசம் வித்தியாசமானதாகும்.

"எமது சுதந்திரமான கல்விக்கு வழி விடு" என்று பதாகைகளை ஏந்தி பறக்கவிட்ட மாணவர்கள் - இன்று சுதந்திரத்துக்காகப் போராட வாருங்கள் என்று அழைப்பு விடுக்கின்றார்கள். கண்டனப் பேரணிகளை கால்தேய நடத்தியவர்கள் இன்று களத்துக்கு விரைவோம் என்கிறார்கள்.

ஆத்திரம் தாங்காமல் இராணுவம் மீது கற்களை வீசியவர்கள், குண்டு வீசிப் போராடுவோம் வாருங்கள் என்கிறார்கள்.

இந்தப் பேனா முனைகளை துப்பாக்கிகளாயும், வெள்ளைச் சீருடைகளை புலிச் சீருடைகளாகவும், புத்தகப் பைகளை குண்டு சுமக்கும் "கோல்சர்"களாயும் மாற்றம் காண வைத்தது சிங்கள அரசாங்கத்தின் கல்வி ரீதியான அடக்குமுறையே ஆகும்.

பள்ளி நோக்கி வந்த மாணவர்கள் ஆயுதத்தின்பால் நாடிவருவதை இந்த முறை ஜூன் - 6 எதிர்பார்க்கின்றது. அரச பயங்கர வாதத்துக்கு எதிரான இறுதிப் போரில் மாணவர்கள் இணைகின்ற எழுச்சியாக எதிர்பார்க்கின்றது. கூக்குரலும், அழுகை ஓசையும் காதில் விழாத அரசை சுடுகுழல் ஏந்திச் சுட்டெரிக்கும் நிலையில் எழுந்து வரும் காலம் உதித்திருக்கின்றது.

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

கல்லாது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல்

- திருக்குறள்

## நமது நோக்கு

# தடை யாருக்கு?

சுனாமியாலும், போராலும் அழிந்து போன வீடுகள், கட்டடங்களைப் புனரமைத்தல், வறிய மக்களுக்கான வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் இலங்கை அரசாங்கம் முடக்கிவிட்டிருக்கிறது.

சீமெந்து, உருக்குக் கம்பிகளுக்கு விதிக்கப்பட்ட தடையால் வடக்கிலும்- கிழக்கிலும் பெருமளவு அபிவிருத்தித் திட்டங்களும், வீடமைப்புத் திட்டங்களும் தடைப்பட்டிருக்கின்றன.

உலக வங்கியின் உதவியுடனான வீடமைப்புத் திட்டம் இப்போது மும்முரமாக இடம்பெற்றுவரும் தருணத்தில்தான் அரசின் சீமெந்துத் தடை இடியாய் விழுந்திருக்கிறது.

பகுதி பகுதியாக உலக வங்கியால் வழங்கப்படும் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு குறிப்பிட்ட அளவு கட்டடப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். கட்டடப் பொருட்களுக்கான செலவு தவிர்ந்த கூலியைக் கூட பயனாளிகளே கொடுக்கும் இந்தத் திட்டம் இப்போது ஸ்தம்பிதமடையும் நிலையை எட்டியிருக்கிறது.

600 ரூபாவாக விற்ற சீமெந்து இப்போது 1000 ரூபாவைத் தாண்டிவிட்டது. இந்த விலைக்கு சீமெந்து வாங்கி குறிப்பிட்ட நிதிக்குள் வீடு கட்டுவதென்றால்- ஒரு பகுதியைத்தான் கட்ட முடியும். எஞ்சியதைக் கட்டி முடிக்க வறிய மக்கள் எங்கே போவார்கள்?

அது போலவே சுனாமி மீள் கட்டுமான வேலைகளை ஏதோ சில தொண்டர் நிறுவனங்களாவது செய்து கொண்டிருக்கின்றன. குறிப்பிட்ட அளவு தொகையை மட் டுமே ஒதுக்கீடு செய்து தமது வீடமைப்பு, திருத்தப் பணிகளை மேற்கொண்டுவரும் இந்த நிறுவனங்களும் சீமெந்துத் தடையால் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளன.

போர் வெடிக்காமல் - அரசு சீமெந்து, உருக்குக் கம்பிகளுக்குத் தடை விதித்தமையானது எந்த வகையிலும் நியாயமற்றதென்பதுடன்- இவை திட்டமிட்டே தமிழ் மக்களுக்கு உதவிகள் கிடைக்காமல் செய்யும் சதி நோக்கம் கொண்டதென்பதில் எந்தவித சந்தேகமும் கிடையாது.

சுனாமியால் பேரழிவைச் சந்தித்த வடக்கு - கிழக்குப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கான - சுனாமி நிவாரணப் பொதுக் கட்டமைப்பு ஒன்றைக்கூட வழங்க மனமில்லாத சிங்கள அரசு - ஏதோ தொண்டர் நிறுவனங்கள் மூலம் கிடைத்துவரும் சிறு சிறு உதவிகளையும் கூட பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்க விடாமல் செய்து கொண்டிருக்கிறது.

எந்தவொரு வெளிநாட்டு நிதியுதவியுமே குறிப்பிட்டதொரு காலத்துக்குள் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடனேயே விடுவிக்கப்படுவது வழக்கம். நிலைமை இப்படியிருக்க - அரசாங்கம் சீமெந்து, கட்டடப் பொருட்களுக்கு விதித்திருக்கும் தடையால் பெருமளவு உதவிக் கொடுப்பனவுகள் கிடைக்காமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலையில் தமிழ் மக்கள் கொட்டாவி விடவேண்டும் என்றே அரசாங்கம் எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது.

தமிழ் மக்களுக்குத் தானும் எதுவும் செய்யாமல் தொண்டர் நிறுவனங்களுடான உதவித் திட்டங்களையும் தடுத்து நிறுத்தி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது அரசாங்கம்.

அவசரமாகப் புனரமைப்புச் செய்ய வேண்டியதும் எவ்வித வசதிகளும் இல்லாத பாடசாலைகளுக்குமான கட்டுமானப் பொருட்களையும்கூட அரசு ஓமந்தையில் தடுத்து வைத்திருக்கிறது.

இப்படியெல்லாம் செய்வதனூடே அரசு தமிழ் மக்களின் மனங்களை வென்றுவிடலாம் என்று எப்படிக் கணக்கிடுகிறதோ தெரியவில்லை.

சமாதானப் பேச்சு, அமைதித் தீர்வு என்று ஒருபுறம் புலம்பிக்கொண்டு - தமிழ் மக்களின் வயிற்றிலடிக்கும் அரசாங்கத்தை சர்வதேச சமூகம் இன்னமும் கண்டு கொள்ளாதிருப்பது வேடிக்கைதான்.


ஒரு கையால் கொடுத்து மறுகையால் பறிக்கலாம் என்ற நிலையில்- சர்வதேச நாடுகளும், சர்வதேச நிதி நிறுவனங்களும் எப்படித்தான் இந்தத் தடை குறித்து கண்டும் காணாமல் இருக்கின்றனவோ தெரியவில்லை.

போர்க்காலத்தில் பொருளாதாரத் தடையை தமிழ் மக்கள் மீது சுமத்தி ருசி கண்ட சிங்கள அரசால் - தமிழ் மக்களின் எழுச்சியை மட்டுமன்றி, அவர்கள் வாழ்வில் முன்னேற்றம் காண்பதையும் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை.

அதனால்தான் பொருத்தமற்ற தருணத்தில் - எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத செயலை அரசு செய்துகொண்டிருக்கிறது.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# இலங்கை வன்முறைகளை விசாரிக்க கண்காணிப்புக்குழு நியமிக்க வேண்டும்

## அவுஸ்ரேலியப் பிரதிநிதி ரொபின் கில் பற்றிக்



அவுஸ்ரேலியா—

இலங்கை வன்முறைகள் குறித்து விசாரணை நடத்தக் கண்காணிப்புக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபையின் அவுஸ்ரேலிய இணைப்பாளர் ரொபின் கில் பற்றிக் அம்மையார் வலியுறுத்தியுள்ளார்.

அவுஸ்ரேலிய விக்டோரிய ஈழத் தமிழ்ச் சங்கமும் அதன் சக தமிழ் அமைப்புகளும் இணைந்து நடத்திய வன்முறைகளுக்கு எதிரான கண்டனப் பொதுக்கூட்டம் கடந்த சனிக்கிழமை மாலை மெல்பேணில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ரொபின் கில் பற்றிக் அம்மையாரே இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் பரவலாக நடைபெறும் வன்முறைகள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதான தாக்குதல்கள், அதிகரித்துள்ள காணாமல் போதல் சம்பவங்கள், தேக்கமடைந்துள்ள பேச்சுகள், மனித உரிமை ஆணைக் குழுவுக்கான நியமனங்களில் ராஜபக்ஷ அரசு வெளிப்படுத்திய அரசியல் ஆதிக்கம் தொடர்ந்து நடைபெற்று வரும் உக்கிரமற்ற யுத்தம் ஆகியவை குறித்து சர்வதேச மன்னிப்புசபை மிகுந்த கவலையடைகிறது.

தொடரும் வன்முறைகளால் கடந்த ஆறு மாதங்களில் மட்டும் அப்பாவி பொதுமக்கள் உட்பட 600பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த ஒரு மாதத்தில் மாத்திரம் சுமார் 200 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கிழக்கிலங்கையில் சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

முழு அளவில் நடைபெறும் இந்த வன்முறைகளால் மனித உரிமைகள் குறிப்பாக இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகள் கடுமையாகப் பாதிக்கப்படும்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கான நியமனங்களில் இலங்கை அரசு காண்பித்துள்ள அரசியல் சாசனத்துக்குப் புறம்பான ஆதிக்கத்தால், ஆணைக் குழுவின் செயற்திறன் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது. 25பேர் காணாமல் போயுள்ளதாக அண்மையில் பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகள் இலங்கையில் 1995 - 96 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இராணுவ நடவடிக்கையில் இடம்பெற்ற காணாமல் போதல் போன்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன.

எனவே மனித உரிமைகள், வன்முறைகள் குறித்து உரிய விசாரணைகளை மேற்கொள்ளச் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புக்கள், சர்வதேச சமூகம் முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நட்ட ஈட்டைப் பெற்றுக்கொடுக்கவும் கொலைகள் மற்றும் காணாமல் போதல்கள் குறித்துச் செம்மையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அச்ச மேகங்கள் சூழ்ந்த நிலையை இல்லாமல் செய்யும் பொருட்டு வன்முறைகளை நிறுத்த வேண்டும்.

பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புகள் சர்வதேச மனித உரிமை சட்ட விதிகளைப் பேணி அப்பாவிப் பொது மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத சூழ்நிலையை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

போராலும், சுனாமியாலும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உரிய நிலையான தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு புதிய ஆணையாளர் ஒருவரை உடனடியாக நியமிப்பதன் மூலம் மனித உரிமைகளில் உள்ள ஈடுபாட்டை இலங்கை அரசு வெளிப்படுத்த வேண்டும். பொதுமக்களை நோக்கிய வன்முறைகளை நிறுத்தவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலுள்ள புலிகளை கைதுசெய்ய வேண்டும்!

## ஜாதிக ஹெலஉறுமய கோரிக்கை

கொழும்பு—

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீது விதித்துள்ள தடையை வெறுமனே கடிதக் கோவையாக மட்டும் மட்டுப்படுத்தாது ஒன்றியத்திலுள்ள நாடுகள் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முக்கிய செயற்பாட்டாளர்களைக் கைது செய்ய சட்ட ரீதியான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஜாதிக ஹெல உறுமய ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி யூலியன் வில்சனிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பிரிட்டனிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் விடுதலைப் புலிகளைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகர் உருத்திரகுமாரன் மற்றும் ஜே.சி. மகேஸ்வரன் ஆகியோர் அமெரிக்காவில் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தடை செய்தமை குறித்து எமது வரவேற்பைத் தெரிவிக்கிறோம். இலங்கையின் அரசியல் யாப்பை மதித்து நாடு பிளவுபடாத ஒன்றையாட்சியை நோக்கி அரசாங்கம் செல்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் உதவி செய்ய வேண்டும்.

இதற்காக விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டு ஜனநாயக நீரோட்டத்துக்கு திரும்பும்வரை இலங்கை அரசுக்கு உதவ வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (தே)

# புதிய அடையாள அட்டைகள் அடுத்த வருடம் முதல் விநியோகம்

கொழும்பு—

பாதுகாப்பு முறைகளுடன் கூடிய கணனி மயப்படுத்தப்பட்ட புதிய தேசிய அடையாள அட்டை அடுத்த வருடம் தொடக்கம் அறிமுகப்படுத்துவதற்கு ஆட்பதிவுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி தற்போது பாவனையிலுள்ள அடையாள அட்டைகள் அடுத்த வருட இறுதியில் இரத்துச் செய்யப்படுமென ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் ஏ.ரி.தர்மதாச தெரிவித்தார்.

வழங்கப்படவுள்ள புதிய அடையாள அட்டைகள் தற்போது பாவனையிலுள்ள அடையாள அட்டையைவிட மிகவும் சிறியதெனவும், அதன் முன்பக்கத்திலுள்ள புகைப்படம் கணினித் தொழில்நுட்பத்தின்னூடாக அச்சிடப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் புதிய அடையாள அட்டையின் முன்பக்கத்தில் புகைப்படம் மற்றும் அடையாள அட்டடை இலக்கத்துக்கு மேலதிகமாக பெயர், முகவரியும் சேர்ப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அடையாள அட்டைக்குரியவரின் இடது கை பெருவிரல் அடையாளமும், விசேட பாதுகாப்பு இரகசிய இலக்கங்களும் அச்சிடப்படும். இது இயல்பாக கண்ணுக்குப் புலப்படாததெனவும் அவர் தெரிவித்தார்.


அத்துடன் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளும் வயதை 15 ஆகக் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 10 வருடங்களுக்கு மட்டும் செல்லுபடியாகக் கூடியவகையில் புதிய அடையாள அட்டை விநியோகிக்கப்படும்.

தற்போது பாவனையிலுள்ள அடையாள அட்டையில் புகைப்படம் ஒட்டப்பட்டுள்ளதால் அதனை மாற்றக் கூடியதாக உள்ளதுடன், நீரில் விழுந்தால் அழிவடைவது உட்பட பல குறைபாடுகளுடன் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சமாதானத் தீர்வா அல்லது போரா? ஜனாதிபதி முடிவு செய்ய வேண்டும்!

## கேணல் சொர்ணம் தெரிவிப்பு



திருகோணமலை—

தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வு காண்பதா அல்லது சமாதானத்தின் மூலம் தீர்வு காண்பதா என்பதை மகிந்த ராஜபக்ஷதான் முடிவுசெய்ய வேண்டுமென திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து அச்சம் காரணமாக இடம்பெயர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆளுகைக்குட்பட்ட பகுதியான வெருகல் பிரதேசத்தில் குடியமர்ந்த 1000க்கும் மேற்பட்ட குடும்பங்களை கடந்த சனிக்கிழமை வெருகல் ஆலய முன்றலில் வைத்து திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. எழிலன், தளபதி தேவன் ஆகியோர் சந்தித்து அவர்களின் குறைளை கேட்டறிந்தனர்.

மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் புரட்சி தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில்- அங்கு உரை நிகழ்த்திய கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் மேலும் தெரிவித்ததாவது-

போர்க்களத்தில் இராணுவ வலுவை வெளிப்படுத்திய பின்னரே இலங்கை அரசாங்கத்துடன் விடுதலைப் புலிகள் பேச்சுக்குச் சென்றனர். தற்போது விடுதலைப் புலிகளின் பலம் அதிகரித்துள்ளது. எமது இராணுவப் பலம் அதிகரித்துள்ள போதும் நாம் பேச்சுக்களை தொடரத் தயாராகவுள்ளோம்.

தமிழ் மக்களாகிய நாம் எமது பிரதேசத்தில் சுதந்திரமாக நிம்மதியாக வாழவேண்டும் என்றே விரும்புகின்றோம்.

எமது நிலத்தில் எதிரியை விரட்டி நாம் நிரந்தராமாக, நிம்மதியாக வாழக்கூடிய நிலை வெகுவிரைவில் தோன்றும். இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேசங்களை கைப்பற்றி எமது படைக்கலங்களும், நாமும் பாரிய அளவில் முன்னேற்றம் அடைந்த நிலையில்- இதற்காக எந்தவேளையிலும் தயாராகவே உள்ளோம்.

நாங்கள் தற்போது எமது தேசியத் தலைவரின் ஒரே ஒரு சொல்லுக்காகவே காத்திருக்கின்றோம். அவரின் அனுமதி கிடைத்ததும் தமிழர்களை அச்சுறுத்தி படுகொலை செய்து வரும் அனைத்து வெறியர்களையும் கொன்றொழித்து அங்கு தமிழ் மக்கள் நிம்மதி மூச்சுவிட சிறந்ததொரு வழியை அமைத்துத்தருவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சிறைச்சாலை அதிகாரிகளுக்கு ராணுவப் பயிற்சி வழங்கப்படும்

### ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு—

சிறைச்சாலை அதிகாரிகளுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் மேஜர் ஜெனரல் விஜய குணவர்த்தன தெரிவித்தார்.

சிறைச்சாலை அதிகாரிகளுக்கு இராணுவப் பயிற்சி வழங்குவதன் மூலம் பொலிஸாரினதும், படையினரினதும் ஒத்துழைப்பின்றி சிறைச்சாலைச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு சிறைச்சாலையில் எட்டு சிறைக் கைதிகள்தப்பிச் சென்றமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கைதிகள் தப்பிச் சென்றமைக்கு சிறைச்சாலையில் கடமையாற்றும் சில அதிகாரிகள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

கைதிகள் தப்பிச் சென்ற வேளை கடமையிலிருந்த அதிகாரி ஒருவரும் மூன்று பாதுகாவலர்களும் தமது கடமையைச் சரிவரச் செய்யாத காரணத்தாலேயே கைதிகள் தப்பிச் செல்ல முடிந்ததெனவும் அதிகாரிகள் சிலர் கைதிகள் தப்பிச் செல்வதற்கு உதவியிருக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவை தலையிடக்கோரி தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்!

சென்னை—

இலங்கை இனப்பிரச்சினையில் இந்திய அரசு தலையிடவேண்டும் என வலியுறுத்தி தமிழகத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளதாக மார்க்சியப் பெரியாரியார் பொதுவுடமைக் கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் அமைப்புச் செயலாளர் வே.ஆனைமுத்து வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நிலவும் தற்போதைய சூழ்நிலை குறித்து அந்நநாட்டு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து இந்தியப் பிரதமர் பேசவேண்டும்.

இலங்கை நிலைமைகளை அறிவதற்காக இந்திய நாடாளுமன்றக் குழுவை அனுப்பவேண்டும் என்பன உட்பட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகத்தின் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என ஆனைமுத்து தெரிவித்தார்.

## அரசுடன் இணையும் எண்ணம் ஜே.வி.பிக்கு கிடையாதாம்!

### விமல் வீரவன்ச தெரிவிப்பு



கொழும்பு—

அரசாங்கத்துடன் இணையும் எண்ணம் எதுவும் ஜே.வி.பிக்கு கிடையாதென அந்தக் கட்சியின் பிரசாரச் செயலாளரும், நாடாளுமன்றக் குழுத் தலைவருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசாங்கத்தில் ஜே.வி.பி இணையவுள்ளதாக ஊடகங்களில் வெளிவரும் செய்திகள் கட்டுக் கதையாகும். அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்கும் எண்ணம் எமக்கு இல்லை. இது தொடர்பாக கட்சியில் விவாதிக்கப்படவுமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

ஒற்றையாட்சிக் கோட்பாட்டிலிருந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விலகி, பிளவுபடாததேசம் என்ற கோட்பாட்டை முன்வைத்து வருவதை ஜே.வி.பி கடுமையாக விமர்சனம் செய்து வரும் அதேவேளை, அரசாங்கத்தில் இணையுமாறு ஜே.வி.பிக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்து வருகிறார்.

இந்த நிலையில் அரசாங்கத்தில் இணையப்போவதில்லை என ஜே.வி.பி மீண்டும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்.இணைப்பதிகாரியாக சுவேந்திரராசா

யாழ்ப்பாணம்—

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலக இணைப்பதிகாரியாக துரைராசா சுவேந்திரராசா மனித உரிமைகள் ஆணைக்குழு தலைமை அலுவலகத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் கடந்த மூன்று வருடங்களாக விசாரணை அதிகாரியாகக் கடமையாற்றி வந்த இவர் நேற்று முதல்யாழ்.மனிதஉரிமைகள்ஆணைக்குழுவின் இணைப்பதிகாரியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளார்.

இதேவேளை, முன்னர் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் இணைப்பதிகாரியாக கடமையாற்றிய றோகித பிரியதர்ஷன அநுராதபுரத்திலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு மாற்றம் செய்யப்பட்டதையடுத்து சுவேந்திரராசா நியமிக்கப்பட்டார்.

முன்னர்யாழ்.அலுவலக இணைப்பதிகாரியாக பணிபுரிந்து வந்த றோகித பிரியதர்ஷனவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

### கூட்டுறவு...

உணவுத் திட்டத்தின் கீழான உலர் உணவுப் பொருட்கள் எடுத்துச் செல்வது தொடர்பாக கட்டைபறிச்சான். இராணுவ முகாமுக்குச் சென்ற நிலையில் கடத்தப்பட்டார்.

இவர் கடத்தப்பட்டு 5 நாட்களாகிவிட்ட நிலையிலும் அவரது நிலைமை என்ன என்று இதுவரை தெரியவில்லை.

### சொல்ஹெய்ம்...

வழங்குவதோடு இந்தச் சந்திப்பின் மூலம் திருப்பம் ஏற்படலாம் என்று நம்பிக்கை கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### 2 இளைஞர்கள்...

இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத் தில் இருவரும் கொல்லப்பட்டதாக இராணுவம் தெரிவித்தது.

### படையினரின்...

பிரசவித்துள்ளார். சுமார் ஒன்றரை மணி நேரம் படையினர் வாகனத்தைச் செல்ல விடாது தடுத்து வைத்திருந்ததாலேயே இந்த நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### படையினர்...

கணவன் -மனைவி இடையில் ஏற்பட்ட பிரச்சினையைச் சமரசம் செய்வற்கு படையினர் சென்றபோது அங்கு என்ன நடக்கிறது என்று குறித்த நபர் பார்க்கச் சென்ற வேளை படையினரின் துப்பாக்கி வெடித்ததில் அவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

### கிழக்கில்...

தகவல்கள் உள்ளது.

விமானப்படையினர் சம்பூரில் விமானத் தாக்குதலை நடத்தியதையடுத்து கிழக்கு மாகாணத்துக்கு விடுதலைப் புலிகள் விமான எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொண்டுவந்திருக்கலாமென உளவுப்பிரிவு நம்புகின்றது.

கருணா குழுவின் பிரதான முகாம் வெலிக்கந்தையில் உள்ளதால் புலிகளின் இலக்காக அது இருக்கலாம். அத்துடன் வவுணதீவு மற்றும் சித்தாண்டி இராணுவ முகாம்களும் புலிகளின் முக்கிய இலக்காக உள்ளதாகவும் உளவுப்பிரிவு எச்சரித்துள்ளது. (தே)

### அல்லைப்பிட்டி...

விசாரணைகள் நேற்று ஊர்காவற்துறை நீதிமன்றில் நீதிவான் ஜெயராமன் றொக்ஸி முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அல்லைப்பிட்டியில் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கு கடற்படையினரே காரணம் எனவும், கொலை செய்தவர்களை அடையாளம் காட்ட முடியும் எனவும் அந்தச் சம்பவத்தில் உயிர் தப்பிய றொபின்சன் வயலட் என்ற பெண்மணி தெரிவித்திருந்தார்.

எனவே, இது தொடர்பான அணிவகுப்பை நேற்று ஊர்காவற்துறை நீதிமன்றில் நடத்த நீதிவான் பணித்திருந்தார். இதற்கான பொறுப்பை கொழும்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகேஸ் பெரேரா தலைமையிலான குற்றப்புலனாய்வினர் ஏற்றிருந்தனர்.

எனினும், அவர்கள் இதற்குப் பொறுப்பாக யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த குற்றப் புலனாய்வு இன்ஸ்பெக்டர் ஒருவரை நியமித்திருந்தனர். குறித்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் தனது அறிக்கையில் - இந்தச் சம்பவம் தொடர்பாக உயிர் தப்பிய பெண்ணின் சாட்சியம் ஏனைய சாட்சிகளுடன் வேறுபடுகிறது. கடற்படையினரே இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டதாக கூறியபோதும், ஆள் அடையாளங்களை அவர் தெரிவிக்கவில்லை. தனது வீட்டுக்கு முன்பாக ஒரு இராணுவ முகாமே உள்ளதாக அவர் கூறியுள்ளார். ஆனால், அல்லைப்பிட்டியில் இரண்டு கடற்படை முகாம்கள் உள்ளன.

எனவே, இந்தச் சம்பவம் தொடர்பாக உரிய சாட்சிகள் தமக்கு கிடைக்கவில்லை எனவும், குறித்த பெண்ணின் கருத்துக்கள் முரணானவை எனவும் கூறி தமது தரப்பு முன்னேற்ற அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் இந்த அறிக்கையை கடுமையாக விமர்சித்த நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்ட வேலைகளை நிறைவேற்றாமல் முரண்பாடான தகவலை மட்டும் கூறுகின்றனர். எனவே, குற்றப் புலனாய்வுத் துறையினரின் அறிக்கை பொறுப்பற்ற செயல் எனவும் சாட்சியம் அளித்த பெண் கடற்படையினரை அடையாளம் காட்ட முடியும் எனவும் தெரிவித்திருந்தார். இந்த வழக்கு தொடர்பாக முடிவெடுப்பது நீதிமன்றின் கடமையாகும்.

எனவே, குற்றப்புலனாய்வுத் துறையினரின் செயற்பாடு தொடர்பாக பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்கவுள்ளதாகவும், அவரும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் உயர் அதிகாரிகளுக்கு அறிவிக்கவுள்ளதாகவும் நீதிவான் தெரிவித்தார். இந்த வழக்கு எதிர்வரும் 20 ஆம் திகதி மீண்டும் நடைபெறவுள்ளது.

### இந்தியா...

அதிர்ச்சியளிப்பதாகவுள்ளது. தமிழ்ச் சகோதரர்களும், சகோதரிகளும் இலங்கை இராணுவத்தினரின் கைகளில் சிக்கி உயிரிழந்து, மானம் இழந்து வரும் நிலையில் மாநில அரசும், மத்திய அரசும் மௌனம் சாதித்து வருவது மிகுந்த அதிர்ச்சியாகவும், வருத்தமாகவும், வேதனையாகமுவுள்ளது.

எனவே உடனடியாக இரண்டு அரசுகளும் தங்களது மௌனத்தைக் கலைத்து இலங்கைத் தமிழர்களைக் காக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாக்யா இசைப்பயிலகம்
மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
❖ வாய்ப்பாட்டும் பண்ணிசையும் -
செல்வி செ.வற்சலா (இசைக் கலைமாணி)
❖ வயலின் -
திரு.அ.ஜெயராமன் (இலங்கை முன்னணிக்கலைஞர்)
❖ மிருதங்கம் -
திரு.சதா.வேல்மாறன் (இலங்கையின் முன்னணிக் கலைஞர்)
❖ புல்லாங்குழல் -
திரு.கு.நக்கீரன் (இலங்கையின் முன்னணிக்கலைஞர்)
❖ ஓகன் -
திரு.ந.செல்வச்சந்திரன் (இசைக்கலைமாணி RDPA)
பெற்றோர்களே!
உங்கள்குழந்தைகளைச் சிறந்த
இசைக்கலைஞர்களாக உருவாக்க அரிய சந்தர்ப்பம்.
தவறவிடாதீர்கள்.
-இன்றுமுதல் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்-
பாக்யா காகிதாதிகள்
இல - 121, கே.கே.எஸ் வீதி,கொக்குவில்.
தொடர்பு - 077 3053129
[C/5353]
BABICOM DIGITAL MEDIA 0777286218

REERDO
பெற்றோர்களே!
உங்கள் பிள்ளைகளைத் தினந்தோறும் பாடசாலைக்கு அனுப்பிவையுங்கள்
"அறியாமை இழிவல்ல அறிய மனமில்லாமல் இருப்பதே
மிக மிக இழிவாகும்"
பெற்றோர்களே சிந்தியுங்கள்!
Unicef
குளப்பிட்டி வீதி, உயரப்புலம், ஆனைக்கோட்டை,
REERDO
[C/5359]

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.06.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.